# உத்தரபிரதேசத்தில் ராமருக்கு 325 அடி உயரத்தில் சிலை

## ரூ.330 கோடி செலவில் அமைக்க திட்டம்

லக்னோ,நவ.3–

உத்தரபிரதேசத்தில் ராமருக்கு 325 அடி உயரத்தில் மிகப்பெரிய பிரம்மாண்ட சிலை அமைக்கப்படுகிறது. இதற்காக ரூ.330 கோடி செலவிடப்படுகிறது.

உத்தரபிரதேச மாநில முதல்வர் யோகி ஆதித்யநாத் தீபாவளியை முன்னிட்டு வருகிற 6 ந் தேதி அயோத்திக்கு செல்ல உள்ளார். அங்கு அவர் பல்வேறு சிறப்பு வழிபாடுகள் நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளார். அதன் பிறகு அங்கு நடக்கும் பொதுக் கூட்டத்தில் பேச உள்ளார்.

அந்த சமயத்தில் அயோத்தி பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் புதிய அறிவிப்பு ஒன்றை வெளியிட அவர் முடிவு செய்துள்ளார். இது தொடர்பாக உத்தரபிரதேச மாநில பா.ஜ.க. தலைவர் மகேந்திரநாத் பாண்டே கூறியதாவது:– முதல்வர் யோகி ஆதித்யநாத் துறவி ஆவார். அயோத்தி பிரச்சினைக்கு தீர்வு காண புதிய திட்டம் ஒன்றை அவர் தயாரித்துள்ளார். அந்த திட்டத்தை அவர் வருகிற 6 ந் தேதி தீபாவளி தினத்தன்று அயோத்தியில் வெளியிட உள்ளார். அதுமட்டுமின்றி அயோத்தியில் மியூசியம், கலை அரங்கம், விமான நிலையம் உள்பட பல்வேறு நலத்திட்டங்கள் தொடர்பாகவும் முதல்வர் அறிவிப்பு வெளியிட உள்ளார்.

இந்த அறிவிப்பின் மூலம் அயோத்தியில் ராமர் கோவில் கட்டுவது உறுதியாகும். உத்தரபிரதேசத்தில் ராமருக்கு மிகப்பெரிய பிரம்மாண்ட சிலை அமைக்கும் திட்டமும் உள்ளது. சரயூ நதி கரையில் ராமருக்கு 325 அடி உயரத்தில் பிரம்மாண்ட சிலை அமைக்கப்படும். இதற்காக ரூ.330 கோடி செலவிடப்படும். 36 மீட்டர் உயர பீடத்தில் ராமர் சிலை நிறுவப்படும். இதுபற்றிய அறிவிப்பையும் 6 ந் தேதி முதல்வர் வெளியிடுவார் என்றார். அயோத்தியில் ராமர் கோவில் கட்ட முதல்வர் யோகி ஆதித்யநாத் அறிவிப்புகள் வெளியிட்ட பிறகு மிகப்பெரிய ரத யாத்திரை பிரச்சாரம் மேற்கொள்ள ஆர்.எஸ்.எஸ். திட்டமிட்டுள்ளது. இதற்கு முன்பு உத்தரபிரதேசத்தில் அத்வானி நடத்திய ரத யாத்திரை போன்று இந்த யாத்திரை அமையும் என்று கூறப்படுகிறது. அயோத்தியில் ராமர் கோவில் கட்டுவதற்கான தேதியை முதல்வர் யோகி ஆதித்யநாத் அறிவிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## எளிதாக வர்த்தகம் செய்யும் நாடு இந்தியா: மோடிக்கு உலக வங்கி தலைவர் பாராட்டு

வாஷிங்டன்,நவ.3–

எளிதாக வர்த்தகம் செய்யும் நாடுகள் பட்டியலில் இந்தியா முன்னேறியதற்கு உலக வங்கி தலைவர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாட்களுக்கு முன் உலக வங்கி பட்டியலில் எளிதாக வர்த்தகம் செய்யும் நாடுகள் குறித்த தகவல் வெளியானது. அதில இந்தியா 77 வது இடத்திற்கு முன்னேற்றியதாக செய்திகள் வெளியாயின. இது குறித்து உலக வங்கி தலைவர் ஜிம் யோங் கிம் தனது பாராட்டை தெரிவித்தார். அதில், எளிதான வர்த்தகம் செய்யும் நாடுகள் பட்டியலில் இந்தியா முன்னேறியுள்ளது. முன்னெப்போதும் இல்லாத ஒரு "வரலாற்று சாதனை".

நாட்டை நான்கு ஆண்டுகளுக்குள் ஒரு குறுகிய கால இடைவெளியில் முன்னேற வைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. இதற்கு காரணம் பிரதமர் மோடியின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பு மற்றும் தலைமைத்துவத்தை கணிசமான அளவிற்கு நிறைவேற்றி காட்டியதே என்று அவர் பாராட்டினார்.

# நான்தான் உங்கள் தலைவர் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்

## கூகுள் ஊழியர்களுக்கு சுந்தர் பிச்சை எச்சரிக்கை

வாஷிங்டன்,நவ.3–

கூகுள் நிறுவனத்தின் தலைவர் நான் தான் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள் என அந்நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி சுந்தர் பிச்சை ஊழயர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பாலியல் புகார்களுக்கு ஆளான 13 மூத்த அதிகாரிகள் உட்பட 48 பேருக்கும் அதிகமான பணியாளர்களை கூகுள் நிறுவனம் அண்மையில் பணியிலிருந்து நீக்கியது. அவர்களுக்கு பணிக்கொடையும் வழங்கப்படவில்லை. ஆனால், இந்தப் பணிநீக்கம் மூலம் பாலியல் புகாரில் சிக்கியவர்களை கூகுள் நிறுவனம் காப்பாற்றப் பார்க்கிறது என அந்நிறுவனத்தின் ஊழியர்கள் பலர் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர்.

தங்கள் எதிர்ப்பைக் காட்டும் முகமாக 1000 ஊழியர்களுக்கு மேல் ஒரே நாளில் விடுமுறை எடுத்தனர். இந்நிலையில் இந்தப் பிரச்சினை குறித்து கூகுள் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி சுந்தர் பிச்சை நியூயார்க் நகரில் நடந்த நிகழ்ச்சியில் பேசும்போது, ஊழியர்களுக்கு அநீதி இழக்கப்படும்போது மற்ற ஊழியர்கள் இணைந்து குரல் கொடுப்பது வரவேற்க வேண்டியதுதான் என்றார்.

மேலும், பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையானதை செய்துள்ளோம். கூகுள் நிர்வாகத்தின் செயல்பாடு விருப்பு, வெறுப்பு இல்லாமலே நடக்கிறது. ஒவ்வொரு விஷயத்திலும் வாக்கெடுப்பு நடத்தி, முடிவு செய்யும் முறையில் ஒரு நிறுவனத்தை நடத்த முடியாது. நான்தான் இப்போதும் உங்கள் உயர் அதிகாரி என்பதை ஊழியர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்றும் சுந்தர் பிச்சை கேட்டுக்கொண்டார்.

## ‘2.0’ – படத்துக்குத் தான் இசை அமைத்தேன்; 8 படங்களுக்கு இசையமைத்த அனுபவம்: ஏ.ஆர். ரகுமான் பெருமிதம்




சென்னை, நவ.3–

‘2.0’வில் 4 பாடல்கள் உள்ளன. ஆரம்பத்தில் பேக்கிரவுன்ட் ஸ்கோர் மட்டுமே பாடல்களே இல்லை என்றுதான் ஆரம்பித்தோம். ஆனால் 4 பாடல்கள் ஆகிவிட்டன. இந்த ஒரு படத்துக்கு இசையமைத்தது 8 படங்களுக்கு இசையமைத்த அனுபவத்தைத் தந்தது. 3 ஆண்டுகள் உழைப்பு. இப்போதுகூட அண்மையில் இசையில் பல மாற்றங்கள் செய்திருக்கிறேன்’ என்று பெருமிதத்தோடு கூறினார்.

‘2.0’ ட்ரெய்லர் வெளியீட்டு விழாவில் ’உயிரே உயிரே என் பேட்டரியே’ பாடல் லிரிக்கல் வீடியோ ஒளிபரப்பானது. அதனைத் தொடர்ந்து இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான் பேசினார்.

இப்பாடலை கார்க்கி எழுதியிருக்கிறார். சித் ஸ்ரீராம், ஷாஷா பாடியிருக்கிறார்கள். இப்பாடலுக்காக ஷங்கர் எளிதில் காம்ப்ரமைஸ் ஆகவில்லை.

நான் 12 ட்யூன் 13 ட்யூன்கள் கொடுத்தேன். பின்னர் இந்த ட்யூன் அவருக்குப் பிடித்திருந்தது. இந்தப்பாடல் வீடியோவைப் பார்த்தபோது நான் திகைத்துப்போனேன். ஷங்கர் ஷங்கர்தான். இந்த ஸ்கோரை சாம்ப்ளர்ஸ் மூலம் கம்போஸ் பண்ணிவிட்டு. பின்னர், லண்டனில் 100 பேர் ஆர்கஸ்ட்ரா மும்பையில் 40 பேர் கோயர் அதன் பின்னர் சென்னையில் என மூன்று ஸ்டூடியோக்களில் உருவாக்கினோம்’ என்று அனுபவம் பேசினார்.

இந்நிகழ்வில் பல்வேறு திரையுலக பிரபலங்கள் வீடியோ வடிவில் எழுப்பிய கேள்விக்கு ஏ.ஆர்.ரஹ்மான் பதிலளித்தார். இதில் முதலாவதாக இசையமைப்பாளர் அனிருத்தின் கேள்வி கேட்கப்பட்டது. ’இத்தனை ஆண்டு பயணத்தில் எந்த ஹீரோவுக்கு பணியாற்ற ரொம்ப பிடித்திருந்தது’ என்று ஏ.ஆர்.ரஹ்மானிடம் கேட்டார்.

அதற்கு ஏ.ஆர்.ரஹ்மான் கூறியதாவது:

10 ஆண்டுகளுக்கு முன்னதாகவே பதில் சொல்லிவிட்டேன். சூப்பர் ஸ்டாருடன் பணியாற்றவே ரொம்ப பிடிக்கும். ஏனென்றால் நிறைய விஷயங்கள் இருக்கின்றன.

ஒரு பெர்சானிலிட்டிய லைக் பண்ணனும்னா அவர் வாழ்க்கையில் எங்கிருந்து எங்கு உயர்ந்திருக்கிறார், எத்தகைய கடின நிலைகளைக் கடந்திருக்கிறார், எப்படி இந்த உயரத்தைஅடைந்தார், எதையெல்லாம் அவர் சொல்லித் தருகிறார், எங்கிருந்து எந்த உயரத்துக்குப் போகிறார் என்றெல்லாம் தெரிய வேண்டும்.

அதை நான் ரஜினி சாரிடம் பார்த்திருக்கிறேன். குறிப்பாக அவரது ஆன்மிக சிந்தனைகள் பிடிக்கும். அப்புறம் இந்த வயதிலும் அவர் தொழிலில் காட்டும் ஈடுபாடு.

**40 வயதில் ரிடையர் ஆக ஆசை**

நான் ஆஸ்கர் வென்றவுடன் ஒய்வுக்கு ஆசைப்பட்டேன். 40 வயதில் ரிட்டையர் ஆக வேண்டும் என நினைத்தேன். ஆனால், 2.0 படப்பிடிப்புக்குச் சென்றிருந்தபோது செட்டில் அவரது உழைப்பைப் பார்த்தேன். அப்போதே எனது முடிவை மாற்றிவிட்டேன். இன்னும் அதிகமாக உழைக்க வேண்டும் என நினைத்தேன். இவ்வாறு ஏ.ஆர். ரஹ்மான் தெரிவித்தார்.

## ஜகன் மோகன் ரெட்டி தாக்கப்பட்ட வழக்கு: இளைஞருக்கு 7 நாள் நீதிமன்ற காவல்

சென்னை, நவ.3–

ஒய்.எஸ்.ஆர் காங்கிரஸ் தலைவர் ஜகன் மோகன் ரெட்டி தாக்கப்பட்ட வழக்கில் கைது செய்யப்பட்ட இளைஞரை 7 நாள் நீதிமன்ற காவலில் வைக்க விசாகப்பட்டினம் பெருநகர நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த மாதம் 25ஆம் தேதி ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் தலைவர் ஜகன் மோகன் ரெட்டி விசாகப்பட்டினம் விமான நிலையத்திற்கு வந்தார். அங்குள்ள கேன்டினில் பணிபுரியும் ஸ்ரீநிவாச ராவ் என்ற இளைஞர் அவருடன் செல்ஃபி எடுக்க விரும்புவதாக கூறி தான் மறைத்து வைத்திருந்த சிறிய ரக கத்தியால் ஜகன் மோகன் ரெட்டியின் இடது கையில் குத்தினார். உடனடியாக அங்கிருந்த ஒய்.ஆர்.எஸ் காங்கிரஸ் கட்சியினர் அந்த இளைஞரை மடக்கி பிடித்தனர். அந்த இளைஞரை கைது செய்த போலீசார், ஜகன் மோகன் ரெட்டியை சிகிச்சைக்கு அனுப்பி வைத்தனர்.

போலீஸ் நடத்திய விசாரணையில்ஸ்ரீநிவாச ராவ் விமான நிலையத்தில் எந்த இடத்திற்கு வேண்டுமானாலும் செல்லும் வகையில் அனுமதி அளிக்கப்பட்டிருந்தது தெரியவந்தது.

அக்டோபர் 28ம் தேதி அவரை 6 நாட்கள் போலீஸ் காவலில் வைக்க உள்ளூர் நீதிமன்றம் உத்தரவிட்டது. போலீஸ் காவல் முடிந்த நிலையில் ஸ்ரீநிவாசராவ் நேற்று விசாகப்பட்டினம் மூன்றாவது பெருநகர நீதிமன்ற நீதிபதி எல்.ஜகதீஷ்குமார் முன்பு ஆஜர்படுத்தப்பட்டார்.

அப்போது சிறப்பு புலனாய்வு குழுவினர் குற்றவாளியிடம் இருந்து தகவல்களை வெளி கொண்டு வர போலீஸ் காவலை நீட்டிக்குமாறு அவகாசம் கோரி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர். அந்த மனுவைத் தள்ளுபடி செய்த நீதிபதி, இளைஞரை 7 நாட்கள் நீதிமன்ற காவலில் வைக்க உத்தரவிட்டார். இந்த வழக்கின் விசாரணை நவம்பர் 9ம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

## பிரான்சில் கல்வி பயில 10 ஆயிரம் பேருக்கு விசா

புதுச்சேரி,நவ.3–

பிரான்சில் கல்வி பயில 10 ஆயிரம் பேர் இந்தியாவில் இருந்து விசா பெறும் வாய்ப்பு உள்ளதாக துணை தூதர் கேத்தரின் ஸ்வார்டு கூறியுள்ளார்.பிரான்ஸ் நாட்டுக்கான தமிழக புதுவை துணை தூதர் கேத்தரின் ஸ்வார்டு புதுவையில் நிருபர்களிடம் கூறியதாவது:–

பிரான்சுக்கு கல்வி கற்கவும், வர்த்தகம், சுற்றுலா செல்வோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. பிரான்சுக்கு சராசரி வருகையாளர் எண்ணிக்கை தற்போது 30 சதவீதம் வரை அதிகரித்துள்ளது.

வருகிற 2020ம் ஆண்டில் பிரான்சில் கல்வி பயில 10 ஆயிரம் பேர் இந்தியாவில் இருந்து விசா பெறும் வாய்ப்பு உள்ளது.பிரான்ஸ் தூதரகத்துடன் இணைந்து இந்த சேவையை வழங்கும் முறை தற்போது தொடங்கப்பட்டுள்ளது.

வருகிற ஜனவரி மாதம் முதல் செப்டம்பர் வரையிலான காலக்கட்டத்தில் புதுவையில் இருந்து பிரான்ஸ் செல்ல விசா விண்ணப்பங்கள் எண்ணிக்கை 34 சதவீதம் வரை அதிகரித்துள்ளது.

தென் இந்தியாவிலேயே அதிக அளவில் புதுவையில் இருந்து விண்ணப்பிக்கின்றனர். கொச்சியில் இது 51 சத வீதமாகவும், சென்னையில் 39 சதவீதமாகவும் உயர்ந்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**ENROLMENT NOTICE**

After 10 days of the publication of this notice and within three months there after. I, Veeraragavan.K, S/o. K.Kannappa, aged 45 years, permanently residing at No.86/59B, 5th Cross Street, Collectorate Colony, Aminjikarai, Chennai –600 029. Intend having my enrolment as an Advocate moved before the bar council of tamilnadu, bar council building, high court campus, chennai-600 104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

**Veeraragavan.K**

**********

After 10 days of the publication of this notice and within three months there after. I, S.Abirami, D/o. V.R.Suresh, aged 25 years, permanently residing at No.190, TVS Main Road, Devar Nagar, Padi, Chennai –600 050. Intend having my enrolment as an Advocate moved before the bar council of tamilnadu, bar council building, high court campus, chennai-600 104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

**S.Abirami**

**********

After 10 days of the publication of this notice and within three months there after. I, M.Thamizh Elakkiya, D/o. M.Mathiyazhagan, aged 22 years, permanently residing at No.77, Malaiyadivaram, Natham, Kundrathur, Chennai -600 069. Intend having my enrolment as an Advocate moved before the bar council of tamilnadu, bar council building, high court campus, chennai-600 104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

**M.Thamizh Elakkiya**

**********

After 10 days of the publication of this notice and within three months there after. I, T.Yuvarani, D/o. L.Thirunavukkarasu, aged 23 years, permanently residing at No.65, New Street, Poonamallee, Chennai – 600 056. Intend having my enrolment as an Advocate moved before the bar council of tamilnadu, bar council building, high court campus, chennai-600 104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

**T.Yuvarani**

**********

After 10 days of the publication of this notice and within three months there after. I, Hemamalini.R, D/o. Rajendran, aged 24 years, permanently residing at No.157, 1st Street, Vijayaragavapuram, Saligramam, Chennai –600 093. Intend having my enrolment as an Advocate moved before the bar council of tamilnadu, bar council building, high court campus, chennai-600 104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

**Hemamalini.R**

**********

After 10 days of the publication of this notice and within three months there after. I, B.Rakesh Kumar, S/o. Brammdev Sharma, aged 30 years, permanently residing at No.50, Alagappa Road, Purasaiwakkam, Chennai –600 084. Intend having my enrolment as an Advocate moved before the bar council of tamilnadu, bar council building, high court campus, chennai-600 104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

**B.Rakesh Kumar**

**SHRIRAM CITY UNION FINANCE LTD.**
**123 Angappa Naicken Street, Chennai – 600 001**
**NOTICE OF LOSS OF SHARE CERTIFICATES**

**Notice is hereby given that the following Share Certificates issued by the Company are stated to have been lost/misplaced (with or without transfer deeds) and the registered/bonafied holders thereof has applied to the Company for the issue of Duplicate Share Certificates.**

| Folio No. | Name | Cert . Nos. | Dist. Nos. | No.of shares |
|---|---|---|---|---|
| 3297 | T MATHIAZAGAN M RATHI | 19847 | 4769701 - 4769800 | 100 |
| | | 40314 | 6316033 -6316052 | 20 |
| | | 40315 | 6316053 - 6316057 | 5 |

**The public is hereby warned against purchasing or dealing in any way with the above Share Certificates. Any person who has any claim in respect of the said Share Certificates should lodge such claim with the Company at its registered office at the address given above within 15 days of publication of this notice, after which no claim will be entertained and the Company will proceed to issue duplicate Share Certificates in favour of the registered holder.**

**Place : Chennai**
**Date : 03/11/2018**

**For Shriram City Union Finance Ltd.**
**Company Secretary**

**சப்தரிஷி அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்**

Saptarishi

CIN: L15499TN1992PLC022192

பதிவு அலுவலகம்: படாளம் சுகர் பாக்டரி ரோடு, பழையனூர் அஞ்சல், காஞ்சிபுரம் மாவட்டம், தமிழ்நாடு –603 308.

|www.saptarishiagro.com| | Email Id: saptarishi12@yahoo.in|

**30.09.2018–ல் முடிந்த காலாண்டு / அரை ஆண்டுக்கான தனியான தணிக்கையான நிதிநிலை முடிவுகள் அறிக்கை**

(ஒரு பங்கு விபரத்தை தவிர மற்றவை ரூ.லட்சத்தில்)

| வ எண் | விவரங்கள் | முடிந்த காலாண்டு 30.9.2018 தணிக்கை யாகாதது | நாளது தேதிவரை 30.9.2018 தணிக்கை யாகாதது | முடிந்த காலாண்டு 30.9.2017 தணிக்கை யானது |
|---|---|---|---|---|
| 1. | செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் (நிகரம்) | 746.56 | 1274.54 | 0.00 |
| 2. | வரிக்கு பின் சாதாரண நடவடிக்கை மூலம் நிகர லாபம்/(நஷ்டம்) | (6.46) | (18.08) | (9.78) |
| 3. | வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | (6.46) | (18.08) | (9.78) |
| 4. | சமபங்கு மூலதனம் | 3402.00 | 3402.00 | 3402.00 |
| 5. | ரிசர்வுகள் (கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கைபடி மறுமதிப்பீடு ரிசர்வுகள் நீங்கலாக) | 0.00 | 0.00 | 0.00 |
| 6.i | பங்கு ஒன்றுக்கான சம்பாத்தியம் (அசாதாரண அயிட்டங்களுக்கு முன்) (ஒவ்வொன்றும் ரூ.10) (வருடாந்திரமல்ல) | | | |
| | (ஏ) அடிப்படை (ரூ.) | (0.02) | (0.05) | (0.03) |
| | (பி) டைலூட்டட் (ரூ.) | (0.02) | (0.05) | (0.03) |
| 6.ii | பங்கு ஒன்றுக்கான சம்பாத்தியம் (அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) (ஒவ்வொன்றும் ரூ.10) (வருடாந்திரமல்ல) | | | |
| | (ஏ) அடிப்படை (ரூ.) | (0.02) | (0.05) | (0.03) |
| | (பி) டைலூட்டட் (ரூ.) | (0.02) | (0.05) | (0.03) |

குறிப்பு:

1. செபி (பட்டியல் மற்றும் இதர வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் மேற்கண்ட காலாண்டு/அரையாண்டு நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கம் ஸ்டாக் எக்சேஞ்சில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. காலாண்டு/அரையாண்டு நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் ஸ்டாக் எக்சேஞ்ச் இணையதளம் (www.bseindia.com) மற்றும் கம்பெனியின் இணையதளத்தில் உள்ளது.
2. முழு நிதி ஆண்டுக்கான தணிக்கையாகாத கணக்குகள் மற்றும் சம்பந்தப்பட்ட நிதி ஆண்டுகளில் மூன்றாவது காலாண்டு வரை நாளது தேதிவரை வெளியிடப்பட்ட முடிவுகளுக்கு இடையே சமன் செய்யப்பட்டதாக கடைசி காலாண்டு முடிவுகள் உள்ளது. அவை மறுவரையறுக்கப்பட்ட ஆய்விற்குட்பட்டதாகும்.
3. நடப்பு காலாண்டு/ஆண்டு ஒப்பீடு நோக்கிற்காக எங்கெல்லாம் தேவையோ அங்கெல்லாம் கடந்த ஆண்டு/கால கணக்குகள் மறுவகைப்படுத்தப்பட்டுள்ளது.

சப்தரிஷி அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்டுக்காக
குருணான் பட்டேல்
சேர்மன்
(DIN : 02517567)

இடம் : அகமதாபாத்
தேதி : 02.11.2018

**எக்விடாஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்**

equitas

பதிவு அலுவலகம்: 410'A', 4வதுமாடி, ஸ்பென்ஸர் ப்ளாசா, ஃபேஸ் II, எண். 769, மவுண்ட் ரோடு, அண்ணாசாலை, சென்னை 2

CIN: L65100TN2007PLC064069 | Ph: 044 4299 5000 | www.equitas.in

**செப்டம்பர் 30, 2018 வரை முடிவடைந்த மூன்று மாத மற்றும் அரையாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத தனிப்பட்ட நிதிநிலை முடிவுகள்**

(₹ லட்சத்தில்)

| வ. எண் | விபரங்கள் | தனிப்பட்ட முடிவுகள்: முடிவடைந்த மூன்று மாதங்கள் செப்டம்பர் 30, 2018 தணிக்கை செய்யப்படாதது | முடிவடைந்த மூன்று மாதங்கள் செப்டம்பர் 30, 2017 தணிக்கை செய்யப்படாதது | முடிவடைந்த ஆறு மாதங்கள் செப்டம்பர் 30, 2018 தணிக்கை செய்யப்படாதது | முடிவடைந்த ஆறு மாதங்கள் செப்டம்பர் 30, 2017 தணிக்கை செய்யப்படாதது | முடிவடைந்த ஆண்டு மார்ச் 31, 2018 தணிக்கை செய்யப்படாதது |
|---|---|---|---|---|---|---|
| 1 | செயலாக்கங்களிலிருந்து மொத்த வருமானம் | 509.28 | 501.78 | 1,013.34 | 998.74 | 2,004.56 |
| 2 | இக்காலம் / ஆண்டுக்குரிய நிகர இலாபம் வரி, மற்றும் வழக்கத்திற்கு மாறான / அசாதாரண வகைகளுக்கு முன் | 353.37 | 370.71 | 725.99 | 719.53 | 1,385.97 |
| 3 | இக்காலம் / ஆண்டுக்குரிய நிகர இலாபம் வரிக்கு முன் மற்றும் வழக்கத்திற்கு மாறான / அசாதாரண வகைகளுக்குப் பின் | 353.37 | 370.71 | 725.99 | 719.53 | 1,385.97 |
| 4 | இக்காலம் / ஆண்டுக்குரிய நிகர இலாபம் வரி, வழக்கத்திற்கு மாறான / அசாதாரண வகைகளுக்குப் பின் | 262.64 | 257.99 | 541.33 | 536.43 | 1,056.50 |
| 5 | இக்காலம் / ஆண்டுக்குரிய (வரிக்குபின்) மொத்த விரிவான வருமானம் (உள்ளடக்கிய லாபம்) மற்றும் இதர வருமானம் (வரிக்குபின்) | 262.53 | 257.43 | 541.12 | 535.32 | 1,058.16 |
| 6 | சமபங்கு மூலதனம் | 34,113.96 | 33,900.91 | 34,113.96 | 33,900.91 | 34,043.00 |
| 7 | காப்புநிதிகள் மறுமதிப்பீட்டு காப்புநிதிகள் தவிர்த்து (முந்தைய ஆண்டின் இருப்பு நிலை அறிக்கையில் காண்பித்துள்ளபடி) | - | - | - | - | 143,462.93 |
| 8 | தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட செயலாக்கங்கள் ஈட்டிய பங்கு ஒன்றுக்கான வருவாய் – மூன்று மாதங்கள்/ அரையாண்டு முடிவில் (முழு ஆண்டிற்கு கணக்கிடப்படாதது) | | | | | |
| (i) | அடிப்படை (₹) | 0.08 | 0.08 | 0.16 | 0.16 | 0.31 |
| (ii) | குறைமதிப்பு (₹) | 0.08 | 0.08 | 0.16 | 0.16 | 0.31 |

குறிப்பு: மேற்குறிப்படப்பட்டவைகள் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015-ன், விதி 33-ன் படி பங்கு வர்த்தக நிறுவனத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மூன்று மாதங்களுக்கான / ஆண்டிற்கான தணிக்கை செய்யப்படாத முழுவடிவிலான நிதிநிலை முடிவுகளின் சுருக்கப்பட்ட வடிவம் ஆகும். மூன்று மாதங்களுக்கான / ஆண்டிற்கான நிதிநிலை முடிவுகளின் முழு படிவமும் நிறுவனத்தின் **www.equitas.in** என்ற இணையதளத்திலும், பங்குவர்த்தக நிறுவனங்களின் **www.nseindia.com, www.bseindia.com** இணையதளங்களிலும் காணலாம்.

நிறுவனங்கள் சட்டம் 2013, பிரிவு 133 மற்றும் நிறுவனங்கள் (இந்திய கணக்கியல் தரநிலைகள்) விதிகள், 2015ன் படி இந்திய கணக்கியல் தரநிலைகளை ('Ind AS') நிறுவனம், ஏப்ரல் 1, 2018 முதல் பின்பற்றத் தொடங்கியது. இந்த மாற்றம் ஏப்ரல் 1, 2017 தேதியிட்டு அமல்படுத்தப்பட்டது. சட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்ட முன்னாள் கணக்குப்பதிவியல் தரநிலைகள், அதற்கேற்ப வழங்கப்பட்ட தொடர்புடைய விதிகள் மற்றும் இந்திய ரிசர்வ் வங்கி விதிகளில் இருந்து (கூட்டாக முந்தைய GAAP என அழைக்கப்படும்) இத்தகைய மாற்றம் மேற்கொள்ளப்பட்டது. அதன்படி 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் 1ம் தேதியிட்ட தொடக்க காப்புநிதியில் மாற்றத்திற்கான தாக்கம் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன்படி மேற்குறிப்பிட்ட முடிவுகள், விவரங்கள் மறு / புதுப்பிக்கப்பட்டிருக்கின்றன.

இயக்குனர்கள் குழு சார்பாக
**sd. S** பாஸ்கர்
செயல் இயக்குனர் மற்றும் தலைமை செயல் அதிகாரி

இடம் : சென்னை
தேதி : நவம்பர் 2, 2018

**MUNOTH FINANCIAL SERVICES LIMITED**

Regd. Office : Suite No. 46&47 “MUNOTH CENTRE”, 343, Triplicane High Road, 3rd Floor, Chennai 600 005.
CIN : L65991TN1990PLC019836

**NOTICE**

Pursuant to Regulation 29 read with Regulation 47 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015, Notice is hereby given that a meeting of the Board of Directors of the Company will be held at Chennai on Tuesday, the 13th November 2018 to consider and take on record the unaudited financial results of the company for the second quarter ended 30th September, 2018.

Investors may also refer to the websites: www.munothfinancial.com, www.bseindia.com.

For Munoth Financial Services Limited
Sd/-
Jaswant Munoth
Managing Director

Place:Chennai
Date:01.11.2018

**MUNOTH COMMUNICATION LIMITED**

Regd. Office : “MUNOTH CENTRE”, Suite No.48, 343, Triplicane High Road, III Floor, Triplicane, Chennai - 600 005.
CIN : L65991TN1984PLC010816

**NOTICE**

Pursuant to Regulation 29 read with Regulation 47 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015, Notice is hereby given that a meeting of the Board of Directors of the Company will be held at Chennai on Tuesday, the 13th November 2018 to consider and take on record the unaudited financial results of the company for the second quarter ended 30th September, 2018.

Investors may also refer to the websites: www.munothcommunication.com, www.bseindia.com.

For Munoth Communication Limited
Sd/-
Jaswant Munoth
Managing Director

Place:Chennai
Date:01.11.2018






**என்பி ஃபுட்வேர் லிமிடெட்**

CIN : L19201TN1987PLC014902
பதிவு அலுவலகம்: 87/84A, மசூதி தெரு செதுவாலை கிராமம், வேலூர் 632 104
நிறுவன அலுவலகம் : எண் 6E, வேது தளம், ஜீ ஜீ எமரால்டு, எண் 151, வில்லேஜ் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை - 600 034.
தொ.: 91-44-28170596
இ-மெயில் : nbfootwearltd@gmail.com, Web: www.nbfootwear.info

**அறிவிப்பு**

SEBI (பட்டியலிடும் கடமைகள் மற்றும் அறிவித்தல் தேவைகள்) நிபந்தனைகள், 2015, நிபந்தனை 29 படி 30.09.2018 உடன் முடிவடைந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து பதிவு செய்ய, இயக்குனர் குழுக்கூட்டம் **திங்கட்கிழமை 12 நவம்பர் 2018** அன்று மாலை 3.00 மணிக்கு A/21 சௌபாக்கியா கூட்டுறவு வீட்டுவசதி சொசைட்டி லிட்., ஜீவன் விகாஸ் மார்க், கோடோங்ரி, அந்தேரி (கிழக்கு), மும்பை-400 069 என்ற முகவரியில் நடைபெறும் என்பதை இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இயக்குனர் குழுவின் ஆணைப்படி
என்பி ஃபுட்வேர் லிமிடெட்டுக்காக
(கண்ணன் யாதவ்)
நிர்வாக இயக்குனர்

இடம் : மும்பை
தேதி : 3.11.2018

மாண்பமை சார்பு நீதிமன்றம்
ஆரணி
S.O.P No.66/2018

1.கிரிதரன்
2.பார்த்தசாரதி
3.விஷ்ணுசக்கரவர்த்தி
மனுதாரர்கள்

எதிர்

NIL –எதிர்மனுதாரர்கள்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர்களின் தந்தை ரங்கநாதன் என்பவருக்கு உரிமையானதாக அஞ்சல் அலுவலகத்தில் சேமிப்பு கணக்கிலுள்ள பணத்தை மனுதாரர்கள் பெற்றுகொள்வதற்கு வாரிசு உரிமை சான்றிதழ் வழங்கி உத்தரவிட கோரி மனுதாரர்கள் தரப்பில் மேற்படி மனுதாக்கல் செய்துள்ளதில் வரும் 19.11.2018 தேதியன்று இறுதி உத்தரவு செய்ய வாய்தா போடப்பட்டுள்ளது. இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் வாய்தா தேதியன்று காலை 10.00 மணிக்கு நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ மேற்குறிப்பிட்ட நீதிமன்றத்தில் ஆஜராகி தங்கள் ஆட்சேபனை தெரிவித்து கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் ஒரு தலைபட்சமாக மனு தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

N.ரகுபதி. M.COM, BL
வழக்கறிஞர், போளூர்
R.நிர்மலா. MA,BL
வழக்கறிஞர், ஆரணி

**பெயர் மாற்றம்**

Karim Sahib. Shabeer Ahmed, தந்தை பெயர்: Late Abdul Karim, பிறந்த தேதி: 24.06.1970, எண்.65–4, மஜித் தெரு, தேன்கனிக்கோட்டை டவுன்– 635 107, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **ABDUL KARIM. SHABBIR AHMED,** என்று அழைக்கப்படுகிறேன்.

**Karim Sahib. Shabeer Ahmed**

**பெயர் மாற்றம்**

Hithayathullah Babu Shariff, தந்தை பெயர்: Babu Shariff, பிறந்த தேதி: 31.05.1976, எண்.138/4, கல்லை மெயின் ரோடு, சங்கராபுரம், சங்கராபுரம் தாலுக்கா, விழுப்புரம் –606401, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **HITHAYATHULLA BABU SHARIFF,** என்று அழைக்கப்படுகிறேன்.

**Hithayathullah Babu Shariff**

**வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் நீதிமன்றம், தாம்பரம்**

மாலதி, க/பெ.திருவேங்கடம் ...மனுதாரர்

பொதுஅறிவிப்பு

மனுதாரர் மகள் T. ஹரிணி சூரஜ் நகர், முடிச்சூர் கிராமம், அதனபுரம், சென்னை–48 என்ற விலாசத்தில் கடந்த 24.12.2011 அன்று பிறந்ததை எதிர்மனுதாரர் அலுவலகத்தில் பதிவுச் செய்ய தவறியதால் தற்போது மேற்படி பிறப்பை பதிவு செய்து கொள்ளுமாறு எதிர்மனுதாரருக்கு உத்தரவிடக் கோரி தாக்கல் செய்துள்ள மனுவின் பேரில் யாருக்கேனும் ஆட்சேபணை இருந்தால் தங்கள் ஆட்சேபணையை 15 நாட்களுக்குள் மேற்படி நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ ஆஜராகித் தெரிவிக்கலாம்எ ன்று அறிவிக்கப்படுகிறது.

K.அசோகன்
R. உமா கோபாலகிருஷ்ணன்
A. விவேக்யுவ காந்தி
மனுதாரர்கள் வழக்கறிஞர்கள்

**பெயர் மாற்றம்**

PAKKIR MAIDHEEN, தந்தை பெயர்: Ibrahim Shakib, பிறந்த தேதி: 10.04.1945, எண்.41A, 1வது தெரு, மசூதி காலனி, மடுவின்கரை, கிண்டி, சென்னை– 600 032, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **ALLA PAKKIR MAIDHEEN,** என்று அழைக்கப்படுகிறேன்.

**PAKKIR MAIDHEEN**

**சார்பு நீதிமன்றம், தாம்பரம்**
**O.S.No.193/2017**

G. ஜெகதீசன், த டிபெ.கோவிந்தன் ...வாதி

எதிர்

திருமதி E. வனிதா, க/பெ.ஏழுமலை நெ.6, மார்கா தெரு, COS. மடுவன்கரை, ஆலந்தூர், சென்னை–16 பிரதிவாதி

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் உங்களுக்கு எதிராக மேற்படி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கானது விசாரணைக்கு வரும் 14.12.2018 அன்று வாய்தா வருகிறது. அன்று நீங்களோ அல்லது வழக்கறிஞர் மூலமோ ஆஜராக வேண்டியது. தவறினால் ஒருதலைபட்சமாக வாதி தரப்பில் தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.

R. சீராளன்
வாதியின் வழக்கறிஞர்